## தலாவ பிரதேச சபை
## அனுராதபுரம் மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 25 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, தலாவ பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தலாவ பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ரூபா 1,601,322 கூட்டுப்பெறுமதியான இயந்திர உபகரணங்கள், மோட்டார் வாகனங்களும் வண்டியும் மற்றும் தளபாடமும் உபகரணங்களும் நிலையான சொத்தாகக் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 4,126,958 தொகை குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு எஞ்சியிருந்த ரூபா 79,720 தொகையான கட்டிடப்பொருட்கள் எஞ்சிய இருப்பாக காண்பிக்கப்படாது ஆண்டின் செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் ரூபா 2,185,364 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாணங்களுக்காகக் கிடைத்த ரூபா 45,628,654 தொகையான மூலதன உதவி, வருமானச் செலவினக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) பகுதிக் களஞ்சியமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 30,069 பெறுமதியான இருப்பு மற்றும் காணியும் கட்டிடத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 25,000 பெறுமதியான கடையின் உரித்தும் சபை வசம் காணப்படவில்லை.

## 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 05 சொத்து/பொறுப்பு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 65,058,924 ஆக இருந்ததுடன் பட்டோலைகள்/ அறிக்கையின் பிரகாரம் அந்தக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 67,109,998 ஆனமையால் ரூபா 2,051,074 தொகையான வேறுபாடு காணப்பட்டது. இந்த வேறுபாட்டிற்குரிய காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 84,732,350 கூட்டுத்தொகையான 05 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 38,434,140 கூட்டுத்தொகையான 04 பொறுப்பு விடயங்கள் என்பவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,052,494 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,437,178 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 99 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது உறுதிச் சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்படாமல் 117 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,398,550 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 180 இன் பிரகாரம் காசு அல்லது களஞ்சியத்திற்குப் பொறுப்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தர்கள் அல்லது வருமானம் தொடர்பான கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்களினால் தலைவர் தீர்மானிக்கின்ற அளவில் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(2) இன் பிரகாரம் ரூபா 254,500 தொகையான 02 வருடங்களை விஞ்சிய உரிமை கோரப்படாத வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 7,374 | 9,446 | 9,182 |
| (ii) | வாடகை | 15,231 | 6,707 | 2,270 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,274 | 1,545 | 182 |
| (iv) | ஏனைய வருமானம் | 10,203 | 16,827 | 3,751 |

### 2.3.2 ஆதனவரி

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ஆதனவரி ரூபா 9,182,346 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வாடகை

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை கடை வாடகையான ரூபா 2,270,045 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 ஏனைய வருமானம்

மீளாய்வாண்டின் போது சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்ட 26 அறிவித்தல் பதாதைகளுக்காக அறவிடவேண்டிய ரூபா 66,257 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 3,312,645 ஆக இருந்ததுடன் 2008 தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் தீர்மானிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்

சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற பின்வரும் சொத்துக்கள் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

| சோத்துக்கள் | எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| மோட்டார் வாகனமும் வண்டியும் | 02 | 800,555 |
| காணியும் கட்டிடமும் | 02 | 1,457,642 |
| கட்டிடப் பொருட்கள் | - | 411,000 |

### 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஓ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு வருடத்திற்கு கூட்டுத்தொகை ரூபா 1,000 இனை விஞ்சி செய்யப்படுகின்ற பொது முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களை நடாத்துதல் அல்லது சமய நிகழ்வுகள், கலாசார, சுகாதார, களியாட்ட அல்லது கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் 5 சந்தர்ப்பங்களின் போது அவ்வாறு செய்யப்பட்ட ரூபா 305,000 கூட்டுத்தொகையான செலவினங்களுக்காக அவ்வாறான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

---

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான பழைய சந்தையின் கடைகளை வாடகைக்கு விடும் உடன்படிக்கை குறிப்பிட்ட திகதிகளில் புதுப்பிக்கப்படாமையின் காரணமாக ரூபா 25,000 பெறுமதியான கடையின் உரித்து சபையினால் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1989 திசெம்பர் 30 ஆந் திகதிய எல்ஜீ/3 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் vii ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக வியாபார உரித்து வாடகைக்கு வழங்கப்படுகின்ற இடங்களின் ஆகக் குறைந்த கேள்வியை விட குறைவாக வாடகைக்கு விட்டமையின் காரணமாக ரூபா 42,644 தெகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) நேர்க்கூலி நிர்மாணங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்டு எஞ்சிய ரூபா 358,555 பெறுமதியான சீமெந்து இருப்புக்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காலாவதியாகியிருந்தது.

(ஈ) சேவையைக் கைவிட்டுச் சென்ற மற்றும் மரணித்த 03 ஊழியர்களிடமிருந்து மூன்று வருடங்களுக்கு மேல் பழமையான அறவிட வேண்டிய ரூபா 66,211 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான நிருவாகம்
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு